## அன்பின் வாசக நெஞ்சங்களே!

மீட்பின் அன்னை பெருநாளை இம்மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுகின்றோம். மரியன்னைக்கு பல பெயர்கள் உண்டு. எந்தெந்த இடங்களில் ஆலயம் அமைக்கப்பட்டதோ அந்த இடத்தை வைத்து மரியன்னைக்கு பெயரை சூட்டுகிறார்கள். லூர்து மாதா, பற்றிமா மாதா, அன்னை வேளாங்கண்ணிமாதா, மடுமாதா இப்படியாக பெயர்கள் சூட்டப்பட்டுள்ளது. இதைவிடவும் அன்னையின் பிராத்தனையில் இருக்கும் அன்னையின் பெயரும் அன்னைக்கு பெயராக வருகிறதை பார்க்கும் போது மரியன்னையின் சிறப்பு இன்று இரட்டிப்பாகிறது. ஆனால் எமது ஆலயத்தின் அன்னையின் பெயர் இன்னும் விசேட சிறப்பை கொடுக்கிது. அதாவது மீட்பின் அன்னை, விடுதலையின் அன்னை என்ற பெயரையும் மரியன்னை தாங்கி நிற்கின்றார். ஆகவே இதன் சிறப்பு மீட்பராம் இறைவன் இயேசுவின் அன்னை என்றும், விடுதலையின் நாயகன் என்று அழைக்கப்படும் கிறிஸ்வின் தாய் என்ற பெருமையை அன்னையானவள் பெறுகின்றார். மீட்பரை இறைவன் ஆதிபெற்றோருக்கு வாக்களித்தார்கள். “ உங்களுக்கு மீட்பரை நான் அனுப்புவேன். அவர் உங்களை பாவத்திலிருந்து மீட்பார்” என்று தொடக்க நூல் மிகவும் சிறப்பாக கூறுகிறது. அந்த மீட்பரை இந்த உலகிலே பிறக்க வைப்பதற்கு அன்னை மரியாளை இறைவன் தெரிவு செய்கிறார். அன்னை மரியாளிடம் இருந்த தகுதியை இறைவன் பார்க்கிறார். ஒரே ஒரு தகுதியை தான் இறைவன் பார்க்கிறார். அதாவது “ இதோ நான் ஆண்டவரின் அடிமை உமது வார்த்தையின் படியே ஆகட்டும்” என்ற மனநிலை தான் மரியாளின் தகுதிநிலையாக இருந்தது என்று கருதமுடியும். இறைவனுக்கு முழுமையாக அடிமையாகுதல் என்பது முக்கியமாக தம்மை வெறுமையாக்குதல் என்பது அர்த்தத்தை கொண்டிருக்கிறது.முக்கியமாக தன்னலம் மறுத்தல், சொந்த விருப்பு வெறுப்புக்களை தியாகம் செய்தல், பொறாமை, எரிச்சல், போன்றவை இல்லாதொழித்தல் மிகவும் முக்கியமானது. பெருமை, புகழ், பெயர், அதிகார போக்கு, போன்ற உலகியல் போக்கையும் களைந்து எறிய வேண்டும். முழுக்க முழுக்க அன்பு, இரக்கம், கனிவு, உதவி செய்தல் போன்ற பண்புகளை உள்ளத்தில் நிரப்பி இருக்க வேண்டும். இவை உள்ள இடத்தில் இறைவனின் பிரசன்னம் இருக்கும். இறைவனின் வல்லமையும் நிழலிடும். ஆகவே தான் இறைவன் மரியாவை மீட்பரின் கருவறையாக தெரிவு செய்து, அந்த மரியாவையே உலக மீட்பரின் தாயாக உயர்த்தி எமக்கெல்லாம் மீட்பரின் அன்னையாக தந்திருக்கிறார். அந்த அன்னைக்கு தான் விழா எடுக்கின்றோம். மீட்பின் அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அன்புடன்,

அருட்பணி யூட் நிக்ஸன்

Parish Priest

Our Lady of Deliverance Tamil Catholic Mission

Montreal (QC), Canada.